# தமிழ்நாடு தகவல் ஆணையம்


எண்.2, தியாகராயர் சாலை, (ஆலையம்மன் கோவில் அருகில்), எல்டாம்ஸ் ரோடு சந்திப்பு,
தேனாம்பேட்டை, சென்னை - 600 018. தொலைபேசி எண். 24347590


**ஆணை நாள் – 18.11.2020**

**முன்னிலை**

**திரு. சு.முத்துராஜ், பி.ஏ., பி.எல்.,**
**மாநிலத் தகவல் ஆணையர்**

*****

## வழக்கு எண்கள். SA 10329/D/2019 & SA 10330/D/2019

திருமதி M. Meriba Rose --- மேல்முறையீட்டாளர்

/எதிர்/

1. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர்,
   மாவட்டக்கல்வி அலுவலகம், தக்கலை,
   கன்னியாகுமரி மாவட்டம்.

--- பொது அதிகார அமைப்புகள்

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
   புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, முளகுமூடு,
   கன்னியாகுமரி மாவட்டம்.

பார்வை:

| | SA 10329/D/2019 | SA 10330/D/2019 |
|---|---|---|
| மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம் பிரிவு 6(1)-ன்கீழ் மனு செய்த நாள் | 04.06.5019 | 04.06.5019 |
| மனுதாரரின் மனு பிரிவு 6(3)-ன்கீழ் மாற்றப்பட்ட நாள் | 27.06.2019 | --- |
| பிரிவு 19(1)-ன் கீழான முதல் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 27.07.2019 | 14.10.2019 |
| பிரிவு 19(3)-ன் கீழான இரண்டாம் மேல்முறையீட்டு மனுவின் நாள் | 14.10.2019 | 14.10.2019 |

****

**ஆணை**

தமிழ்நாடு அரசால் COVID-19 காரணமாக ஊரடங்கு (LOCK DOWN) பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தமிழ்நாடு தகவல் ஆணையத்தில் நேரடியாக விசாரணை மேற்கொள்ள இயலாததால், இன்று (18.11.2020) தொலைபேசி வாயிலாக தொடர்புகொண்டு விசாரணை மேற்கொள்ளப்பட்டது. இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை. பொதுத் தகவல் அலுவலர்கள் திரு K.ராமச்சந்திரன், மாவட்டக்கல்வி அலுவலர், மாவட்டக்கல்வி அலுவலகம், தக்கலை,

கன்னியாகுமரி மாவட்டம் மற்றும் திரு தருமராஜ், தலைமையாசிரியர், புனித ஜொசப் மேல்நிலைப்பள்ளி, முளகுமூடு, கன்னியாகுமரி மாவட்டம் ஆகியோர் இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்றனர்.

2. மனுதாரர் தகவல் பெறும் உரிமைச் சட்டம், 2005, சட்டப்பிரிவு 6(1)-ன்கீழ் தக்கலை மாவட்டக்கல்வி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர் மற்றும் முளகுமூடு புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி அலுவலகப் பொதுத் தகவல் அலுவலர்களுக்கு அனுப்பியுள்ள மனுக்களில், தனது தந்தை திரு.M.மரிய அருளப்பன், முளகுமூடு புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று காலமாகிவிட்டார், அவரது பணிகாலத்தில் 06.09.1988 முதல் 02.06.1997 வரை பணியாற்றாத காலத்தினை சென்னை உயர்நீதி மன்ற ஆணையின் அடிப்படையில் பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் சென்னை அவர்கள், அரசு ஆணை எண்.40, பள்ளிக்கல்வித்துறை நாள் 03.03.2016-ன்படி பணி காலமாக வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. தனது தந்தைக்கு வழங்கப்படவேண்டிய 06.09.1988 முதல் 02.06.1997 வரையிலான நிலுவைத் தொகையினை வாரிசுதாரான தனக்கும் தனது தங்கைக்கும் வழங்குமாறு 19.02.2018 அன்று தக்கலை மாவட்டக்கல்வி அலுவலருக்கு அளிக்கப்பட்ட மனுவின்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கையின் விவரம் உள்ளிட்ட முழு விவரங்களை தகவல்களாக வழங்கக் கோரியுள்ளார்.

3. மனுதாரர் ஒரே பொருள் குறித்து தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 6(1) மற்றும் 19(1)-ன் கீழ் தனித்தனியே தாக்கல் செய்துள்ள மனுக்களுக்கு, தகவல் பெறும் உரிமைச் சட்டப்பிரிவு 19(3)-ன் கீழான தமது இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களை மேற்குறிப்பிட்டவாறு தனித்தனியே இவ்வாணையத்தில் தாக்கல் செய்துள்ளனர். மனுதாரர் இரண்டு இரண்டாவது மேல்முறையீட்டு மனுக்களும் இன்று (18.11.2020) ஒருசேர தொலைபேசி வாயிலான விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டன.

4. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையில் பங்கேற்ற பொதுத் தகவல் அலுவலர், மனுதாரரின் மனுவில் கோரிய அவரது தந்தை திரு.M.மரிய அருளப்பன், முளகுமூடு புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளியில் முதுநிலை பட்டதாரி ஆசிரியராக பணிபுரிந்து பணி ஓய்வு பெற்று காலமாகிவிட்டார் என்றும், அவரது பணிகாலத்தில் 06.09.1988 முதல் 02.06.1997 வரை, அவர் பணியாற்றாத காலத்தினை சென்னை உயர்நீதி மன்ற ஆணையின் அடிப்படையில், சென்னை பள்ளிக்கல்வித்துறை இயக்குநர் அவர்களின் அரசாணை எண்.40, நாள் 03.03.2016-ன்படி, பணிக்காலமாக வரன்முறைப்படுத்தி ஆணை பிறப்பிக்கப்பட்டு, அதன் அடிப்படையில் திரு.M.மரிய அருளப்பன் வங்கிக்கணக்கில் நிலுவைத் தொகையான ரூ.5,20,609/- செலுத்தப்பட்டதாகத் தெரிவித்து, அதற்கான ஆவண நகல்களை ஆணையத்தின் Whatsapp எண்ணில் தாக்கல் செய்தார். இன்றைய விசாரணையில் தொலைபேசி வாயிலாக பலமுறை முயன்றும் மனுதாரரை தொடர்பு கொள்ள இயலவில்லை.

5. இன்றைய தொலைபேசி வாயிலான விசாரணையின் முடிவில், மனுதாரரை தொடர்பு கொள்ள இயலாத நிலையில், பொது அதிகார அமைப்பின் மூலம் மனுதாரரின் தந்தை திரு.M.மரிய அருளப்பன் என்பவருக்கு அனைத்து பணப்பலன்களும் வழங்கப்பட்டுவிட்டன என்ற விவரத்தை இவ்வாணை கிடைக்கப்பெற்ற ஒரு வார காலத்திற்குள் மனுதாரருக்கு வழங்க கன்னியாகுமரி மாவட்டம், முளகுமூடு, புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி தலைமையாசிரியருக்கு உத்திரவிடப்பட்டு, இம்மேல்முறையீட்டு மனுவின் மீதான விசாரணையை இவ்வாணையம் இத்துடன் முடித்துக் கொள்கிறது.

**ஒம்/- (சு. முத்துராஜ்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**(ஆணையத்தின் ஆணைப்படி)**

**உதவிப் பதிவாளர்**

**வழக்கு எண்கள். SA 10329/D/2019 & SA 10330/D/2019**

பெறுநர்

**பொது அதிகார அமைப்புகள்:-**

1. பொதுத் தகவல் அலுவலர் / மாவட்டக்கல்வி அலுவலர்,
   மாவட்டக்கல்வி அலுவலகம், தக்கலை,
   கன்னியாகுமரி மாவட்டம்.

2. பொதுத் தகவல் அலுவலர் / தலைமையாசிரியர்,
   புனித ஜோசப் மேல்நிலைப்பள்ளி, முளகுமூடு,
   கன்னியாகுமரி மாவட்டம்.

**மனுதாரர்:-**

Tmt. M. Meriba Rose,
D/o. Late. M.Maria Arulappan,
No.10/1, Eastaff Street, College Road,
Nagercoil – 629 001.

Copy to: File
SNPA 19.11.2020